| O.S.No. 08/2023 | DW1: திரு. மூர்த்தி<br>த/பெ. திரு. முத்துப்பிள்ளை | 12-02-2026 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது பாட்டனார் பெயர் பச்சைப்பிள்ளை. பச்சைப்பிள்ளைக்கு மொத்தம் 4 பேர் வாரிசுகள். கச்சோலப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகிய இருவர் பெயர் தெரியும், மற்ற இருவரின் பெயர்கள் தெரியாது. அவர்கள் பெயர் பாலப்பிள்ளை, பொன்னப்பிள்ளை என்றால் சரிதான். பச்சைப்பிள்ளை அவருக்கு சொந்தமான சொத்துக்களைப் பொறுத்து எந்தவொரு ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா இறப்பிற்கு பிறகு என்னுடைய பாட்டியும் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாத்தாவும் பாட்டியும் என் தந்தைக்கு திருமணம் செய்து வைத்த பிறகுதான் இறந்துவிட்டார்கள். எனது தாத்தாவும் பாட்டியும் அவரது மகன்களுக்கு திருமணம் செய்து வைக்காமலேயே சிறுவயதிலேயே இறந்துவிட்டார்கள் என்றாலும், என் தந்தைக்கு திருமணம் செய்து வைத்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. எனது தந்தை பெயர் முத்துப்பிள்ளை. முத்துப்பிள்ளைக்கு வேலு, பச்சையம்மாள், கோவிந்தராஜ், மூர்த்தி ஆகியோர் வாரிசுகள் ஆகும். அதில், வேலு என்பவர் சிறுவதிலேயே இறந்துவிட்டார். வேலுவுக்கு அடுத்ததாக பச்சையம்மாள் பிறந்தார். பச்சையம்மாள் 1973–ல் பிறந்தார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. பச்சையம்மாளுக்கு பிறகு கோவிந்தராஜ், அதற்கு அடுத்து நான் பிறந்தேன். அதேபோல் என் தந்தை முத்துப்பிள்ளையுடன் பிறந்த கச்சோலப்பிள்ளை, பாலப்பிள்ளை, பொன்னப்பிள்ளை ஆகியோர்களுக்கும் திருமணமாகி வாரிசுகள் பிறந்தார்கள் என்றால் சரிதான்.

3. திருமணத்திற்கு பிறகும், எனது தந்தை அவரது பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு, அவர்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் பாகம் பிரித்துக்கொண்டார்கள், ஆனால் அது பூர்வீக சொத்துக்கள் இல்லை, தனிப்பட்ட

சொத்துக்கள் ஆகும். எதிர்வழக்குரையை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன்.

4. நான் எனது எதிர்வழக்குரையில் நான் எனது தந்தையும் அவரது சகோதரர்களும் அடைந்து அனுபவித்து வந்து அவர்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். தனிப்பட்ட சொத்து என்பதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்றாலும், அதனால்தான், அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றாலும், தனிப்பட்ட சொத்தாக இருந்தால் அதற்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

5. எத்தனை சென்ட்டிற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கு 50 சென்ட், 32 சென்ட் மற்றும் ஒரு வீட்டிற்கு சேர்ந்து இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது தந்தை முத்துப்பிள்ளைக்கு பாகமாக கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். வாதிக்கு எனது தந்தைதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். வாதியின் மீது என் தந்தை ஒரே பெண் என்பதால் அளவு கடந்து அன்பு கொண்டிருந்தார் என்றால் இல்லை.

6. வாதியின் கணவர் தென்னல் கிராமத்தை சேர்ந்தவர். வாதியின் மீது எனது தந்தை அதிக அன்பு வைத்திருந்ததால் வாதியை அவரது கணவருடன் அழைத்து வந்து தாவா கிராமத்தில் குடும்பம் வைத்தார் என்றால் சரியல்ல. வாதி திருமணமான நாளிலிருந்து தற்போதுவரை தாவா கிராமத்தில்தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதியும், அவரது கணவரும் ஆடு மேய்க்கும் தொழில் செய்கிறார்கள். என் தந்தை கடைசி காலம் வரையில் வாதியும், அவரது கணவரும் ஆடு மேய்க்க சென்றால் வீட்டினை என் தந்தைதான் பார்த்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை கடைசி காலத்தில் உடல்நிலை

சரியில்லாமல் இருந்தபோது வாதி வீட்டிலிருந்து நான் பார்த்துக்கொள்கிறேன் என அழைத்து வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

7. என் தந்தை எப்போது இறந்தார் என்று தெரியவில்லை. என் தந்தை 02.01.2007-ல் இறந்தார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு 82 வயது இருக்கும். என்தந்தை உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றால் இல்லை, திடீரென மாரடைப்பு வந்து இறந்துவிட்டார். என் தந்தை கடைசி காலத்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு இறந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தாயார் 2012-ல் இறந்துவிட்டார். என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களைப் பொறுத்து எந்தவொரு ஆவணங்களும் எழுதாமல் இறந்துவிட்டார் என்று சொன்னால் இல்லை, எனக்கும் கோவிந்தாராஜுக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து 23 ஆண்டுகள் ஆகின்றது. அந்த ஆவணம் நான் மோசடியாக உருவாக்கிய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

8. செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதனை தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரியவரும் என்பதால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணங்களில் கைரேகை வேறுபட்டுள்ளது என்றாலும், அந்த ஆவணங்கள் என்னால் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணங்கள் ஏற்பட்ட காலத்தில் எனது தந்தை உடல்நலக்குறைவு ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல, நன்றாகத்தான் இருந்தார்.

9. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதாலும், அச்சொத்துக்களைப் பொறுத்து என் தந்தை எந்தவொரு ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாலும், அதில் வாதிக்கு 3-ல் 1 பாகம் உரிமை உள்ளது

என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி அம்பிகா பெயரில் எழுதிவைத்த ஆவணம் சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிக்கு தெரியாமல் எந்த ஆவணங்கள் ஏற்படுத்தியிருந்தாலும், அந்த ஆவணத்தில் வாதி தரப்பினர் இல்லை என்பதால், அந்த ஆவணங்கள் வாதியைப் பொறுத்து சட்டப்படி செல்லாது என்றாலும், வாதியின் தாவா தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. தாவா சொத்து என் தந்தை பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர் அச்சொத்துக்களை அனுபவித்து வந்து நல்ல நிலையில் இருந்தபோது எனக்கும், என் அண்ணனுக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். எனக்கு வந்த சொத்தினை நான் அனுபவித்து வந்தேன். என்க்கு வந்த 25 சென்ட்டில் நான் 5, 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து அதில் அவர்கள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் அனுபவித்து வரும் விஷயம் என் அக்காவான வாதி ஊரிலேயே உள்ளதால் அவருக்கு தெரியும் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 12:32:46 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**